பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 03 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வேளாண் - உணவு முறைகளில் மகளிர் பங்களிப்பு குறித்த உலகளாவிய மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

2. சர்வதேச எரிசக்தி முகமை அவசர கால எண்ணெய் இருப்பில் இருந்து 400 பில்லியன் பேரல் எண்ணெயை விடுவிக்க முடிவு செய்துள்ளது.

3. பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழகத்திற்கு வருகை தரும்போதெல்லாம் பல கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் மாநிலத்திற்கு கிடைப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தி வரும் வான்வழித் தாக்குதலில் ஈரானில் 19 ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்புகள் சேதமைடைந்துள்ளன.

5. அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் Andre Goransson இணை அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

வேளாண் - உணவு முறைகளில் மகளிர் பங்களிப்பு குறித்த உலகளாவிய மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறைத் தலைவர்கள், தொழில்முனைவோர்கள், பெண் விவசாயிகள், புத்தொழில் நிறுவன பிரதிநிதிகள், மாணவர்கள் உள்ளிட்ட 700க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சர்வதேச எரிசக்தி முகமை அவசர கால எண்ணெய் இருப்பில் இருந்து 400 பில்லியன் பேரல் எண்ணெயை விடுவிக்க முடிவு செய்துள்ளதற்கு மத்திய அரசு வரவேற்பு தெரிவித்தள்ளது.

இது தொடர்பாக அந்த முகமை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்தியா தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளது.

ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையே நடைபெறும் போர் காரணமாக எண்ணெய் விநியோகத்தில் தடை ஏற்பட்டுள்ளதையடுத்து, 32 உறுப்பு நாடுகளின் அவசரகால இருப்பில் இருந்து இந்த எண்ணெய் விநியோகிக்கப்படுவதாக சர்வதேச எரிசக்தி முகமை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமிழகத்திற்கு வருகை தரும்போதெல்லாம் பல கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்கள் மாநிலத்திற்கு கிடைப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தமிழையும், திருவள்ளுவரையும் உலகெங்கும் கொண்டு சென்ற ஒரே பிரதமர் என்ற பெருமை திரு. நரேந்திர மோடி அவர்களையே சாரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே பெண்களை மதிப்பது குறித்து தமது அரசின் பணிகளே பேசும் என்று பிரதமர் குறிப்பிட்டதை பிஜேபி மகளிர் அணி தேசியத் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், பெண்களுக்கு அதிகாரமளிப்பதை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு கொண்டுவந்த திட்டங்கள் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தெலங்கானாவில் நடப்பு ரபி பருவத்தில் பயிர்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், தெலங்கான அரசின் பரிந்துரைக்கு ஏற்ப ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 850 மில்லியன் டன் பயிர்கள் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட உள்ளதாக கூறினார்.

மொத்தம் 894 கோடி ரூபாய் மதிப்பிலான பயிர்கள் இதன் மூலம் கொள்முதல் செய்யப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகளின் கடின உழைப்புக்கேற்ப அவர்கள் முழு விலை பெறுவதை உறுதி செய்வதையும், சந்தை ஏற்ற இறக்கங்களில் இருந்து

அவர்களைப் பாதுகாப்பதையும் மத்திய அரசு நோக்கமாக கொண்டுள்ளதாக திரு. ஷிவ்ராஜ் சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

சமையல் எரிவாயு சிலிண்டர் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக புதுதில்லியில் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் காவல்துறை தலைவர்களுடன் உள்துறை செயலாளர் திரு. **Govind Mohan** விவாதித்தார்.

அப்போது மேற்காசியாவில் நிலவும் சூழல் காரணமாக நாட்டில் நிலவி வரும் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோக கட்டமைப்பு, பணியாளர் பாதுகாப்பு மூலம் எரிவாயு விநியோகத்திற்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அப்போது அவர் கேட்டுக்கொண்டார்.

நாள்தோறும் இந்த விநியோகத்தை கண்காணிக்குமாறும் விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தினார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறை தொடர்பாக பரவும் அச்சத்தை போக்கும் வகையில் எண்ணெய் சந்தை நிறுவனங்கள் மூலமும், நேரடியாகவும் போதுமான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அரசுகளுக்கு உடனடி தகவல்களை வழங்குவதற்காக தகவல் ஒலிபரப்பு மற்றும் பெட்ரோலிய அமைச்சக அதிகாரிகள் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ள 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை உள்துறை அமைச்சகத்தின் சார்பில் இயங்கி வருவதாகவும் உள்துறை செயலாளர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமரின் இலவச எரிவாயு சிலிண்டர் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் எரிவாயு சிலிண்டர் இல்லாத குடும்பத்தினருக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தமிழகத்தில் நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற சிறப்பு முகாமில் இலவச எரிவாயு சிலிண்டர் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Kannan — 26 Sec)**

<<<<>>>>

ஹோர்முஸ் நீரிணை வழியாக கடக்கும் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அந்த நட்பு நாடுகளைச் சேர்ந்த கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று ஈரான் ராணுவம் எச்சரித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதல் தொடரும் வரை ஒரு லிட்டர் கச்சா எண்ணெய் கூட அவ்வழியாக எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஈரான் நேற்று வணிக கப்பல்கள் மற்றும் துபாய் சர்வதேச விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் வணிக கப்பல்கள் மீதும் அப்பாவி கப்பல் பணியாளர்கள் மீதும் குறிவைத்து தாக்குதல் நடத்தக்கூடாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெயிளிட்டுள்ள செய்திக்குறிப்பில் ஹோர்முஸ் நீரிணை வழியாக செல்ல முயன்ற தாய்லாந்து கப்பல் தாக்கப்பட்டது குறித்து கவலை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்கா, இஸ்ரேல் நடத்தி வரும் வான்வழித் தாக்குதலில் ஈரானில் 19 ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்புகள் சேதமைடைந்துள்ளதாக அந்நாட்டில் உள்ள செம்பிறைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஈரான் மீது கடந்த மாதம் 28ஆம் தேதி முதல் நடத்தப்பட்டு வரும் இத்தாக்குதலில் இதுவரை 19 ஆயிரத்து 734 குடியிருப்புகள் சேதமடைந்தள்ளதாக கூறியுள்ளது.

இடிபாடுகளில் சிக்கியுள்ளோர்களை மீட்கும் பணியில் விரைந்து செயல்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் 13 செம்பிறை மையங்கள் மற்றும் கிளைகள், பல்வேறு நிவாரணம் மற்றும் மீட்பு தளங்கள் சேதமடைந்துள்ளதாகவும் கூறியுள்ளது.

ஈரானின் **Lorestan** மாகாணத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் **52** பள்ளிகள் மற்றும் **5** மருத்துவமனைகள் சேதமடைந்தள்ளதாக அம்மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் **Andre Goransson** இணை அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-3, 7-6** என்ற செட் கணக்கில் ஆஸ்திரியாவின் **Alexander** - இத்தாலியின் **Andrea** இணையை வென்றது.

-------------

டொமினிக்கன் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் **Obrietner** இணை காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, **7-6, 6-4** என்ற செட் கணக்கில் உருகுவே-யின் **Ariel Behar** - பிரிட்டனின் **Joshua Paris** இணையை வென்றது.

---------------

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், தருண் மணப்பள்ளி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் கிரண் ஜார்ஜ் **23-21, 21-19** என்ற செட் கணக்கில் சிங்கப்பூரின் **Kean Yew Loh**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் தருண் மணப்பள்ளி - ஜப்பானின் **Kento Nishimoto**-ஐ வென்றார்.

-------------

ருவாண்டாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பாந்தியா - பல்கேரியாவின் **Alexander Donski** இணை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--------------

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று போட்டியில், ஹைதராபாதில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா **4-1** என்ற கோல்கணக்கில் **Wales** அணியை வென்றது.

**<<<<The End>>>>**